# அதி உன்னத அர்ப்பணிப்பு



அதி உன்னத அர்ப்பணிப்புக்கு
பொருத்தமானவர்கள்
மாவீரர்கள் போராளிகள்
**அதி** என்றால் என்ன
**உன்னத**ம் என்றால் என்ன
**அர்ப்பணிப்பு** என்றால் என்ன
என்று சொல்லி தந்தவர்கள்
அதை செயலில் செய்து காட்டியவர்கள்
அதில் வெற்றியும் ஈட்டியவர்கள்
எங்களால் பேச மட்டும் தான் தெரியும்
அல்லது எழுத மட்டும் தான் முடியும்
அவர்கள் வீர வரலாறே எழுதிக்
காட்டியவர்கள்
ஏன் இன்னும் எழுதுவார்கள்
அவர்களின் இலட்சிய பாதைக்காக
தன் குடும்பத்தை பிரிந்து
தன் நாட்டுக்காக
தனி நாடு கேட்டுப் போராடியவர்கள்
தன் இளமையை துறந்து
தன் மக்களுக்காக
ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள்
எரிகுண்டின் மத்தியிலும்
தன் இனத்திற்காக
கடல் ஆகி பெருக்கெடுத்தவர்கள்
தன் உயிர்களைக் காட்டிலும்
தேசத்தின் விடுதலைக்காக
நெருப்பாகிப் போனவர்கள்
தாயிலும் மோலாக தாய் நாட்டையே
நேசித்தவர்கள்
வீழ்ந்திடும் வரையிலும் ஈழக்காற்றையே
சுவாசித்தவர்கள்
அப்படியானவர்கள் இங்கு
புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டு இருக்கிறார்கள்
அந்த இடத்தைக் கூட
பகைவன் விட்டு வைக்கவில்லை
உடைத்தெறிந்தார்கள் ஏன்
நெல் வயல் போல்
உழுது தள்ளினார்கள்

போர் மரபு தெரியாதவர்கள்
இருங்கள் எல்லாவற்றிக்கும்
மீண்டும் போர் எழும்
அவர்கள் விதைக்கப்பட்ட
அந்த இடத்தில் இருந்து
இன்னும் ஆயிரம் ஆயிரம் போராளிகள்
உருவாகுவார்கள்

பகைவன் கோட்டைகளை
உடைத்தெறிவார்கள்
தகர்த்திடுவார்கள்
சிங்களவர்கள் தமிழர்களை
சீண்டிப்பார்த்தார்கள்
தாங்கள் தான் ராஜாக்கள் என்ற
நினைப்பில் அதனால் தான் புலி
பிறந்தது ஆனால் அந்த புலி இறந்து
விட்டது என்று இன்று சிங்கள தேசம்
கொண்டாடுகிறது கண்களை முடாமல்
கனவு காண்கிறது பொறுத்திருந்து பார்
மீண்டும் புலி எழும்
புதிய பரிமாணத்துடன் வரும்
அப்பொழுது பார்
அங்கு பகைவன் இருக்கமாட்டான்
அவனைச் சுற்றியிருந்த விசமிகள்
இருக்காது ஏன் அவர்கள்
இருந்ததற்கான அடையாளமே
இருக்காது அன்று புரியும் புலியின்
விஷ்வருபம் தெரியும் மாவீரர்களின்
அர்பணிப்புக்கள் வெறும் காகிதங்கள்
அல்ல கசக்கி ஏறிந்து விட
அத்தனையும் நவீன ஆயுதங்கள்
இராசாயன அணுகுண்டுகள்
ஒருநாள் இல்லை ஒருநாள்
அது வெடிக்கும்
அன்று எதிர்பார்

சுதந்திர ஈழம் மலரும்
சுதந்திர ஈழம் மலரும்.

உதயகுமார் தியாகராஜா